செய்தி வெளியீடு எண்:1282 நாள்:06.12.2021

**செய்தி வெளியீடு**

**மழைக்காலத்தை முன்னிட்டு வெளிச்சந்தையில் காய்கறிகள் விலை உயர்வினை கட்டுப்படுத்த குறைந்த விலையில் விற்பனை செய்வது (குறிப்பாக தக்காளி) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள் தகவல்**

தமிழகத்தில் பருவமழை காரணமாக காய்கறிகள் குறிப்பாக தக்காளியின் விலை உயர்வை கட்டுப்படுத்தி மக்களுக்கு மலிவு விலையில் தரமான காய்கறிகள் மற்றும் தக்காளி கிடைக்க தமிழக அரசு பல நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

கூட்டுறவுத்துறை நடத்தும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் தக்காளி கிலோ ரூ 85.முதல் ரூ 100.வரை குறைவான விலையில் தரமாக நவம்பர்' 2021 மாத்தில் பொதுமக்களுக்கு விற்பனை செய்ய முதற்கட்டமாக நாளொன்றுக்கு 15MT தக்காளி மற்றும் இதர காய்கறிகள் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தற்போது மீண்டும் தமிழகத்தின் பல பகுதிகளிலும், அண்டை மாநிலங்களிலும் தொடர் மழை காரணமாக தக்காளி வரத்து குறைந்ததால், மீண்டும் தக்காளி ரூ.120/– முதல் ரூ.130/–க்கு வரை வெளிச்சந்தையில் விற்கப்படுகிறது.

கூட்டுறவுத்துறை நடத்திவரும் 65 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் இன்று (06.12.2021) உத்தேசமாக **10**மெட்ரிக்டன் தக்காளி கொள்முதல் செய்யப்பட்டு ரூ.70/– முதல் ரூ.95/–கிலோவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

**பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் தக்காளி இன்றை விற்பனை விலை:**

| | |
|---|---|
| திருச்சி | ரூ.70/–கிலோ |
| சென்னை | ரூ.75/– கிலோ |
| கோயம்புத்தூர் | ரூ.92/–கிலோ |
| மதுரை | ரூ.95/–கிலோ |

மக்கள் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் தரமான தக்காளி மற்றும் காய்கறிகள் மலிவான விலையில் விற்கப்படுவதை பயன்படுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9